தமிழ் நாடு சட்டப் பேரவை

புதன்கிழமை, 1972 டிசம்பர் 13

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

### ஊத்துக்கோட்டை அரசு உயர்நிலைப்பள்ளிக் கட்டடம்

* 141 வினா.—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் வட்டம், ஊத்துக்கோட்டை அரசினர் உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதலாகக் கட்டடங்கள் அமைக்கும் திட்டம் தற்போது எந்நிலையிலுள்ளது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஊத்துக்கோட்டை அரசினர் (கழக) உயர்நிலைப் பள்ளிக்கு ரூ. 25,000 மதிப்பீட்டில் துணைக் கட்டிடம் கட்டுவதற்கு, 1971 பிப்ரவரி மாதம் அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இவ் வேலைக்கு ரூ. 6,000 நன்கொடை வழங்க பள்ளிக் கட்டிடக் குழு வாக்களித்திருந்தது. இதுவரையிலும் ரூ. 3,000 கொடுத்துள்ளது. மீதித் தொகையை பள்ளிச் சிறப்புக் கட்டணம் மற்றும் இடைநிலைக் கல்வி நிதியிலிருந்து எடுத்துச் செலவிட சென்னை முதன்மைக் கல்வி அலுவலர் நடவடிக்கை எடுத்து வருகிறார். மேற்படி செயற் குறிப்புகளின் மேல் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டதும் வேலை துவக்கப்படும்.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, 1971-ஆம் ஆண்டிலே 25,000 ரூபாய் ஒதுக்கப்பட்டு, அந்தப் பள்ளிக் கட்டிடக் குழு 3,000 ரூபாய் கொடுக்காத காரணத்தால் இது தடைப்பட்டு வேலை நடைபெறாமல் இருக்கிறது. பள்ளி தொடங்குவதற்குமுன் ஏற்கெனவே அவர்கள் அதிகமாக நிதி வசூலித்துவிட்ட காரணத்தால், இந்தத் தொகையை வசூலிக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள்.

'[1972 டிசம்பர் 13

ஆகவே, இதை ஒரு சிறப்பு வழக்காக எடுத்துக் கொண்டு எப்படியேனும் இந்தக் கட்டடத்தை இந்தக் கல்வி ஆண்டிலேயே முடிப்பதற்கான வழிவகையை அரசு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பெரும்பாலான இடங்களில் சாதாரணமாக மொத்தத்தில் ஆகக் கூடிய செலவில் பாதித் தொகையைக் கட்டிடக் குழு ஏற்றுக் கொள்கிறது. மறு பாதித் தொகையை அரசாங்கம் வழங்குகிறது. ஆனால் இந்தப் பள்ளியைப் பொறுத்த வரையில், 25,000 ரூபாயில் 19,000 ரூபாய் அரசு வழங்குகிறது. 6,000 ரூபாய் கட்டிடக் குழு தருவதாக வாக்குறுதி தந்தது. ஆனால், அந்த வாக்குறுதியை அவர்கள் நிறைவேற்றாமல், 3,000 ரூபாய்தான் தந்தார்கள். மீதி 3,000 ரூபாயைச் செலுத்தாத காரணத்தால், பிறகு வேறு எந்த வகையில் ஈடு கட்டலாம் என்ற அளவுக்கு இப்பொழுது பள்ளிக் கட்டட சிறப்பு நிதியிலிருந்து 2,000 ரூபாயும், மற்றும் இடைநிலைக் கல்வி நிதியிலிருந்து ஆயிரம் ரூபாயும் எடுத்து, ஆக மூவாயிரம் ரூபாயைச் சரிக்கட்டி கட்டடத்தை முடிப்பதற்கு முயற்சி எடுக்கலாம் என்று கூறியதன் பேரில் இப்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதற்கான ஆணைகள் பிறப்பிக்கப்பட்டவுடன், கட்டடம் கட்டும் வேலை மேற்கொள்ளப்படும்.

திரு. கா. வேழவேந்தன் : அமைச்சர் அவர்கள் இவ்வளவு சலுகைகளோடு இதை ஏற்றுக்கொள்வதற்கு நன்றி. இப்போது உள்ள மழைக் காலங்களில் மாணவர்கள் மரத்தடியில் உட்கார்ந்து கொண்டு படித்து வருகிறார்கள். ஆகவே, அடுத்த கல்வியாண்டு ஜூன் ஆரம்பத்திலாவது மாணவர்கள் கட்டடத்தில் அமர்ந்து படிக்கக்கூடிய வகையில் வகை செய்வதற்கு பொது மராமத்து இலாகாவை அணுகி இந்த வேலையை உடனடியாக எடுத்துக் கொண்டு முடிப்பதற்கு அரசு சிறப்பு ஆணை பிறப்பிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதற்கான முறைப்படிதான் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியிருக்கின்றன. பள்ளிச் சிறப்புக் கட்டணம் மற்றும் இடைநிலைக் கல்வி நிதியிலிருந்து செலவழிக்க நடவடிக்கை எடுக்கலாம் என்று குறிப்பிட்டிருப்பதால், முறைப்படி எடுக்க வேண்டும். எடுத்தவுடன் கட்டட வேலை துவக்கப் படலாம்.

1972 டிசம்பர் 13]

திரு. ப. முத்துசாமி: இந்த ஆண்டு பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதற்காக ஒதுக்கிய தொகையை மாவட்டவாரியாகப் பிரித்து ஆணையிடப்படாததால் பல கட்டட வேலைகள் தாமதப்படுவதாகக் கூறப்படுகிறது. அது உண்மையா? அப்படியானுல் அதற்கான துரித நடவடிக்கைகள் எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: விவரங்கள் இல்லை, தனிக் கேள்வி போடவும்.

திரு. வீ. மலைக்கண்ணன்: ஆங்காங்குள்ள அரசு உயர்நிலைப் பள்ளிகளில் விஞ்ஞான கூடத்திற்கு ரூ. 40,000, பள்ளிக் கட்டடத்திற்கு ரூ. 20,000 என்று வழங்கப்பட்டு பல கட்டடங்கள் கட்டப்படுகின்றன. மாணவர்கள் கூடுதலாக வரும்போது அவர்களைச் சேர்ப்பதற்கு வசதி இல்லை என்ற நிலை இருக்கிறது. ஆகவே மாணவர்கள் அதிகமாக வரும்போது கூடுதல் கட்டடங்கள் கட்டப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஒதுக்கப்படுகிற நிதியிலிருந்து ஓரளவிற்குச் செய்ய முடியும். பொதுமக்களும் கட்டடங்கள் கட்ட ஓரளவு நிதி உதவ முன் வருவார்களானுல் விரைவில் அப் பணிகள் நிறைவேற வழிவகை ஏற்படும்.

திரு. கு. காமாட்சி: அரசுக்குச் சொந்தமான உயர்நிலைப் பள்ளிகள், ஆரம்பப் பள்ளிகள் இவைகளுக்கெல்லாம் கட்டடங்கள் கட்டுவதற்குத் தனியாக ஒரு வாரியம் அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஊராட்சி ஒன்றியங்களின் கீழேயுள்ள துவக்கப் பள்ளிகளைப் பொறுத்துக் கட்டடங்கள் கட்டத்தான் ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து நிதி உதவி பெற முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. தனி வாரியம் அமைத்தால் நிதி உதவி பெறலாம் என்று வழிவகை இருப்பதால் அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது.

நகராட்சிகள் திரைப்படக் கொட்டகைகள் நடத்தல்.

* 142 வினு.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி–உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

நகராட்சிகள் திரைப்படக் கொட்டகைகளை நடத்த அரசு அனுமதி வழங்க உத்தேசித்துள்ளதா?